(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 120.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 சனவரி 07, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1564/2025

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஏக்கலவில் அமைந்துள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குரிய கைத்தொழில் பேட்டையில் தாபிக்கப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் இயங்கும் நிலையில் காணப்படும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தகைய தொழிற்சாலைகளில் 03 ஆண்டுகளுக்கு மேலாக இயங்காத நிலையில் மூடப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்ட கைத்தொழிற்சாலைகள் சம்பந்தமாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிற்சாலைகளை மீண்டும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிர்வாகத்திற்குள் கொண்டுவந்து, புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கு அந்நிலங்களைக் கையளிக்க முடியுமா என்பதையும்;

(iii) ஆமெனில், இவ்விடயம் தொடர்பில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1576/2025

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தினால் மலையக மக்களுக்காக ‘சிட்டி ரைடர்’ பேருந்துகள் வழங்கப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பேருந்துகள் வழங்கப்பட்டதன் குறிக்கோள் யாதென்பதையும்;

(iv) மேற்படி பேருந்துகளை வழங்கிய அமைப்புகள் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொண்ட அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அப்பேருந்துகளில் பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) மேற்படி பேருந்துகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vii) மேற்படி பேருந்துகளை தற்பொழுது பயன்படுத்தும் தரப்பினர் மற்றும் எவ்வகையான பணிகளுக்கு அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1631/2025

கௌரவ பத்மசிறி பண்டார,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சோமாவதிய தேசிய வனப் பூங்காவுக்கு மத்தியில் மத்திய வங்கியினால் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு ஹோட்டல் தொகுதிகள் காணப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவரின் பொறுப்பில் உள்ளதென்பதையும்;

(iii) அவற்றை நிர்மாணிப்பதற்கு இன்றளவில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அவை இன்றளவில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1635/2025

கௌரவ ருவன் விஜேவீர,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பயிலிளவல் படையணி இலங்கையில் நிறுவப்பட்டுள்ள சட்டம் யாதென்பதையும்;

(ii) அது நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) தேசிய பயிலிளவல் படையணியில் இணைக்கப்பட்டு சேவையாற்றுகின்ற பயிலிளவல் படையணி அலுவலர்களின் எண்ணிக்கையும் அவற்றில் முனைப்பானச் சேவைக்கு கல்வி அமைச்சினால் விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் பயிலிளவல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற பாடசாலைகளின் எண்ணிக்கையும் பயிலிளவல் படையணிகளின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தற்போதைய தேவைகளுக்கமைய தேசிய பயிலிளவல் படையணியின் செயற்பாடுகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அது எவ்விதத்தில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1639/2025

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஜனாதிபதி பிறப்பித்த தடுப்பு உத்தரவுகளின் பிரகாரம் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களுடன் தொடர்புடைய, 2019 ஏப்ரல் 21 முதல் 2022 ஏப்ரல் 21 வரையான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இக்குறித்த நபர்களில், இன்று வரை நீதிமன்றத்தின் முன் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் தடுத்துவைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) தடுப்பு மற்றும்/அல்லது நீதிமன்ற உத்தரவுகளின் பிரகாரம் மூன்று (03) மாதங்களாக, ஒரு (01) வருடம் வரை மற்றும் ஒன்றரை (1½ ) வருடங்கள் வரை அத்துடன் பதினெட்டு மாதங்களுக்கு மேலதிகமாகத் தடுத்துவைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தினை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025 திசெம்பர் 28 ஆம் திகதிய 2468/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.01.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 151 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் அப்போதைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 04 ஆம் திகதிய 2452/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 141, 143, 144, 157அ, 168 மற்றும் 190 ஆம் பிரிவுகளின் கீழ் அப்போதைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 25 ஆம் திகதிய 2455/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்,— கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினால் 2025 டிசெம்பர் 12 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2025.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 திசெம்பர் 01 ஆம் திகதிய 2465/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*14.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

15.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---